winmeen.com

முதலாம் வார நடப்பு நிகழ்வுகள்

டிசம்பர் 2020

டிசம்பர் 01-07

நடப்பு நிகழ்வுகள்

1.மோட்டார் வாகன திருத்தச் சட்டம், 2019'இல், கீழ்க்காணும் எப்புதிய வரையறை சேர்க்கப்பட்டுள்ளது?

அ. மருத்துவ வாகனங்கள்

ஆ. திரட்டிகள் (Aggregators) ☑

இ. சரக்கு வாகனங்கள்

ஈ. மின்சார வாகனங்கள்

❖ மோட்டார் வாகன (திருத்த) சட்டம், 2019'இன் தேவைகள் மற்றும் விதிகளின்படியும், மோட்டார் வாகன சட்டம் 1988'இன் திருத்தப்பட்ட பிரிவு 93'இன்படியும், மோட்டார் வாகன சேவை அளிக்கும் நிறுவனங்க –ளுக்கான வழிகாட்டுதல்கள் 2020'ஐ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

❖ போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசு ஆகியவற்றைக் குறைப்பதற்காகவும், வாகனங்களைப் பகிர்ந்து கொள்வதை முறைப்படுத்துவதற்காகவும் இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி, மோட்டார் வாகன சேவை அளிக்கும் நிறுவனங்கள் தங்கள் தொழிலை நடத்துவதற்கு மாநில அரசின் உரிமம்பெறுவது கட்டாயமாகும். இத்தொழிலில் இருப்பவர்களை ஒழுங்குபடுத்துவதற்காக மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை மாநில அரசுகள் பின்பற்றலாம்.

2. நடப்பாண்டின் (2020) பன்னாட்டு மணல் கலை விழா நடைபெறும் இடமான சந்திரபாகா கடற்கரை அமைந்துள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. ஒடிசா ☑

இ. சென்னை

ஈ. கேரளா

❖ ஒடிசா மாநிலமானது 2020ஆம் ஆண்டு டிசம்பர்.1ஆம் தேதி தொடங்கி அதன் சந்திரபாகா கடற்கரையில் பன்னாட்டு மணல் கலை விழாவைக் கொண்டாடவுள்ளது. ஐந்து நாள் நடைபெறும் இந்த மணல் கலை விழாவானது, கொனார்க்கில் அமைந்துள்ள சூரியன் கோவிலின் கொனார்க் விழாவுடன் இணைந்து நடைபெறுகிறது. COVID–19 கட்டுப்பாடுகள் காரணமாக, இந்திய மணற்சிற்பக் கலைஞர்கள் மட்டுமே மணல், வெண்கலம் அல்லது மரத்தைப் பயன்படுத்தி தங்கள் கலையை வெளிப்படுத்துவார்கள்.

3. 'தில்லி சலோ' என்பது இந்தியாவில் எந்த வகை மக்களால் நடத்தப்படும் போராட்டத்தின் பெயராகும்?

அ. உழவர்கள் ☑

ஆ. தூய்மைப் பணியாளர்கள்

இ. வங்கி ஊழியர்கள்

ஈ. ஆசிரியர்கள்

❖ நடுவணரசு நிறைவேற்றிய புதிய வேளாண் சீர்திருத்த சட்டங்களை இரத்துசெய்யக்கோரி பஞ்சாப், ஹரியானா மற்றும் நாட்டின் பிற பகுதிகளைச் சார்ந்த உழவர்கள் குழுக்கள், 'தில்லி சலோ' என்ற பெயரில் போராட்டங்களை நடத்தி வருகின்றன. வடமேற்கு தில்லியில் உள்ள நிரங்கரி மைதானத்தில், அமைதியான போராட்டங்களை நடத்த உழவர் மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. உழவர்களைப் பொறுத்தவரை, இந்தப் புதிய வேளாண் சட்டங்கள் குறைந்தபட்ச ஆதரவு விலை முறையை நீக்கும்.

4.எந்த மாநிலமானது அதன் சட்டமன்ற உறுப்பினரும் ஓய்வுற்ற IPS அதிகாரியுமான லால்டுஹோமாவை அதன் மாநில சட்டசபையிலிருந்து விலக்கியுள்ளது?

அ. அஸ்ஸாம்

ஆ. மிசோரம் ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. மத்திய பிரதேசம்

❖ மிசோரம் மாநில அரசு தனது சட்டமன்ற உறுப்பினரும் (MLA) ஓய்வுபெற்ற இ கா ப (IPS) அதிகாரியுமான லால்டுஹோமாவை சட்டமன்றத்திலிருந்து தகுதி நீக்கம் செய்துள்ளது. முன்னாள் பிரதம அமைச்சர் இந்திராகாந்தியின் பாதுகாவலுக்கு அவர் பொறுப்பேற்றிருந்தார். இவர், 1988ஆம் ஆண்டில், கட்சித்தாவல் தடைச்சட்டத்தின்கீழ் மக்களவையிலிருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்ட முதல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். தற்போது, ஒரு சுயேட்சை வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும், அவர் தன்னை ZPM கட்சியின் பிரதிநிதியாக அறிவித்த காரணத்தினால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

5. "உணவு மற்றும் வேளாண்மையின் நிலை – 2020" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிடுகிற அமைப்பு எது?

அ. உலக உணவுத் திட்டம்

ஆ. இந்திய உணவு நிறுவனம் (FCI)

இ. உலகளாவிய விவகாரங்களுக்கான சிகாகோ கவுன்சில்

ஈ. உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ☑

❖ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது (FAO) "உணவு மற்றும் வேளாண்மையின் நிலைமை – 2020" என்ற தலைப்பிலான அறிக்கையை, "வேளாண்மையில் உள்ள நீர்சார்ந்த சவால்களை சமாளித்தல்" என்ற பொருளின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது. உலகெங்கும் சுமார் 1.2 பில்லியன் மக்கள் அதிக அளவு நீர்ப்பற்றாக்குறையில் உள்ளனர் என இவ்வறிக்கை கூறுகிறது. அதாவது உலகில் வாழும் அறுவருள் ஒருவர் கடும் நீர்ப்பற்றாக்குறையையோ அல்லது வேளாண் பற்றாக்குறையையோ எதிர்கொள்கிறார். அந்த 1.2 பில்லியன் மக்களுள் சுமார் 50% பேர் தெற்காசியாவிலும், 460 மில்லியன் மக்கள் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலும் உள்ளனர்.

6. உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?

அ. நவம்பர் 29 ஆ. நவம்பர் 30

இ. டிசம்பர் 01 ☑ ஈ. டிசம்பர் 02



- ❖ உலகின் மிகக்கொடிய நோய்களுள் ஒன்று AIDS (Acquired Immune Deficiency Syndrome) இது HIV (Human Immuno–deficiency Virus) எனும் நச்சுயுரியால் ஏற்படுகிறது. இது மனித உடலின் இரத்த வெள்ளையணுக்களை அழிக்கிறது. பின் நோயெதிர்ப்பு மண்டலத்தை தாக்கி, நோய்க்கெதிராக உடல் போராடமுடியாத நிலையை உண்டாக்குகிறது. கடைசியில் மரணத்தை நிகழ்த்துகிறது.
- ❖ இந்த நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் டிச.1 அன்று உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Ending the HIV/AIDS Epidemic: Resilience and Impact" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

7.பன்னாட்டு அடிமை முறை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?

அ. டிசம்பர் 01

ஆ. டிசம்பர் 02 ☑

இ. டிசம்பர் 03

ஈ. டிசம்பர் 04

- ❖ பன்னாட்டு அடிமை முறை ஒழிப்பு நாள் (International Day for the Abolition of Slavery) ஐநா பொது அவையால் அறிவிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.2 அன்று கடைப்பிடிக்கப்படும் நாளாகும். இந்த நாள் முதன்முதலில், கடந்த 1986ஆம் ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது.

8.இந்தியாவில் தேசிய பால் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. நவம்பர் 26 ☑

ஆ. நவம்பர் 28

இ. நவம்பர் 30

ஈ. டிசம்பர் 02

- ❖ இந்தியாவின் வெண்மைப்புரட்சியின் தந்தையான டாக்டர் வர்கீஸ் குரியனின் பிறந்தநாளைக்குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் நவ.26 அன்று தேசிய பால் நாள் கொண்டாடப்படுகிறது. பால் உற்பத்தியில் உலகளவில் ஐம்பதாவது இடத்திலிருந்த இந்தியாவை, சில பத்தாண்டுகளிலேயே மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற்றிய உலகின் மிகப்பெரிய பால் வளர்ச்சித்திட்டமான 'Operation Flood'ஐ உருவாக்கியவர் டாக்டர் வர்கீஸ் குரியன் ஆவார்.

9.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, ஜெயண்ட் மீட்டர்–அலை ரேடியோ தொலைநோக்கி அமைந்துள்ள மாநிலம் எது?

அ. மத்திய பிரதேசம்

ஆ. குஜராத்

இ. மகாராஷ்டிரா ☑

ஈ. கர்நாடகா

- GMRT (Giant Metre–wave Radio Telescope) என்பது மகாராஷ்டிராவின் புனேவில் அமைந்துள்ள ஓர் ஆய்வகமாகும். இது TATA அடிப்படை ஆராய்ச்சி மையம்–தேசிய ரேடியோ வானியற்பியல் மையத்தால் இயக்கப்படுகிறது. அமெரிக்காவைச் சார்ந்த தொழில்நுட்ப அமைப்பான இன்ஸ்டிடியூட் ஆப் எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் எஞ்சினியர்ஸ் (IEEE) ஆனது இந்த ஆய்வகத்திற்கு, 'Milestone' என்ற தகுதியை வழங்கியுள்ளது. சர் C V இராமன் & சர் J C போஸ் ஆகியோரின் ஆய்வகங்களுக்குப் பிறகு இந்தியாவில், 'Milestone' அந்தஸ்தைப் பெறும் மூன்றாவது ஆய்வகம் இதுவாகும்.

10. "The Impact of the COVID–19 Pandemic on Trade and Development: Transitioning to a New Normal" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ. பன்னாட்டு வர்த்தக மையம்

ஆ. உலக வர்த்தக அமைப்பு

இ. வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு ☑

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐநா கூட்டமைப்பானது (UNCTAD), 'வர்த்தகம் மற்றும் மேம்பாட்டில் COVID–19 தொற்றுநோயின் தாக்கம்: புதிய இயல்புக்கு மாறுதல்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. பயன்தரக்கூடிய COVID–19 தடுப்பூசியானது பொருளாதார சேதத்தைத் தடுக்காது என்று அறிக்கை கூறுகிறது. பொருளாதார பின்னடைவு என்பது நீண்டகாலமாக குறிப்பாக ஏழை மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளால் அனுபவிக்கப்படும் என இவ்வறிக்கை கூறுகிறது.

நடப்பு நிகழ்வுகள்

1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சீ கார்டியன் டிரோன்கள், எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டன?

அ. இஸ்ரேல்

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

இ. ஐக்கியப் பேரரசு

ஈ. பிரான்ஸ்

- இந்திய கடற்படையானது ஓர் அமெரிக்க பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து இரு MQ–9B சீ கார்டியன் டிரோன்களை ஓராண்டு குத்தகைக்கு எடுத்துள்ளது. அமெரிக்க நிறுவனமான ஜெனரல் அடாமிகக்சால் தயாரிக்கப்பட்ட அந்த ஆளில்லா வானூர்திகள், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கண்காணிப்பை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும். இந்த வானூர்திகள் அனைத்தும் தமிழ்நாட்டின் கடற்படை வானூர்தி நிலையமான INS இராஜாளிக்கு வந்தடைந்தன.

2.ஆண்டுதோறும் நவம்பர்.29 அன்று, ஐநா அவையானது கீழ்க்காணும் எந்த நாடுடன் தொடர்புடைய 'பன்னாட்டு ஒற்றுமை நாளை' கடைப்பிடிக்கிறது?

அ. இஸ்ரேல்

ஆ. பாலஸ்தீனம் ☑

இ. துருக்கி

ஈ. சிரியா

- 'பாலஸ்தீன மக்களுடனான பன்னாட்டு ஒற்றுமை நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.29 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், 1977ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது, 1947ஆம் ஆண்டில், ஐநா பொது அவையால் பாலஸ்தீனத்தை ஓர் அரபு அரசு (அல்லது) யூத அரசாகப் பிரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றிய நாளைக்குறிக்கிறது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு இரு–நாடு தீர்வை அடைவதற்காக ஐநா தலைவர் அழைப்பு விடுத்தார்.

3. CPCB மற்றும் IIT தில்லி ஆகியவற்றின் அண்மைய ஆய்வின்படி, இந்தியாவின் எந்தப் பகுதி, நாட்டில் அதிக மாசுபாடுடன் காணப்படுகிறது?



அ. இந்தோ-கங்கைச் சமவெளி ☑

ஆ. மேலைக்கடற்கரைச் சமவெளி

இ. கீழைக்கடற்கரைச் சமவெளி

ஈ. வட இந்தியா முழுமையும்

- சமீபத்தில், மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியமும் IIT தில்லியும் நடத்திய ஆய்வின்படி, இந்தோ–கங்கை சமவெளிகள் PM 2.5 அளவுடன், நாட்டின் மிக மாசுபட்ட பிராந்தியமாகத் தொடர்கின்றன. 2000 மற்றும் 2019'க்கு இடையில், தெற்கு மற்றும் கிழக்கிந்தியாவின் மாசு அளவு அதிகரிப்பதற்கான விகிதம் இந்தோ–கங்கை சமவெளிகளை விட அதிகமாக உள்ளது என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

❖ நாட்டின் கிராமப்புறங்களில் காற்று மாசு நகர்ப்புறங்களைப் போலவே அதிகரித்துள்ளது என்பதையும் இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.

4.'Guidelines on physical activity and sedentary behaviour' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ. நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம்

ஆ. உலக நலவாழ்வு அமைப்பு ☑

இ. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்

ஈ. ஐக்கிய நாடுகள் அவை

❖ உலக நலவாழ்வு அமைப்பானது 'Guidelines on physical activity and sedentary behaviour' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்வழிகாட்டுதல்களின்படி, வாரத்திற்கு குறைந்தது 150 முதல் 300 நிமிடங்கள்வரை மிதமான மற்றும் தீவிரமான உயிர்வளிக்கோரும் பயிற்சியை அனைத்து பெரியோரும் மேற்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது. நான்கு பெரியோருள் ஒருவருக்கும், ஐந்து இளம் பருவத்தினருள் நான்கு பேருக்கும் போதுமான உடற்பயிற்சி மேற்கொள்வதில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. இது, உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க இழப்பை ஏற்படுத்துகிறது.

5. பன்னாட்டு வானூர்தி போக்குவரத்து சங்கத்தின் கூற்றுப்படி, கீழ்க்காணும் எந்த நகரம், வான்வழிப் போக்குவரத்தால் மிகவதிகமாக இணைக்கப்பட்டுள்ளது?

அ. சென்னை

ஆ. புது தில்லி

இ. ஷாங்காய் ☑

ஈ. மெல்பர்ன்

❖ பன்னாட்டு வானூர்தி போக்குவரத்து சங்கத்தின் அண்மைய அறிக்கையின்படி, சீனாவின் ஷாங்காய் நகரம் வான்வழிப் போக்குவரத்தால் மிகவதிகமாக இணைக்கப்பட்டுள்ள நகரமாக மாறியுள்ளது. இதற்கு முன், இலண்டன் முதலிடத்திலிருந்தது. IATA'இன் கூற்றுப்படி, இலண்டன் தற்போதுள்ள COVID-19 தொற்றுநோய்ப்பரவலால் வான்வழிப் போக்குவரத்தில் 67% வீழ்ச்சியைக் கண்டுள்ளது. ஷாங்காய் முதலிடத்தைப் பிடித்ததை அடுத்து, மொத்தம் 4 சீன நகரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஹுவலோங் ஒன்' என்பது கீழ்க்காணும் எந்த நாட்டினுடைய உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் அணுவுலையாகும்?

அ. இரஷ்யா

ஆ. இஸ்ரேல்

இ. சீனா ☑

ஈ. ஜெர்மனி

❖ சீனாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அணுவுலையான, 'ஹுலோங் ஒன்', சீன தேசிய அணுவாற்றல் நிறுவனத்தின்படி, அதன் செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது. மூன்றாம் தலைமுறை அழுத்தப்பட்ட நீர் அணுவுலையானது தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த அணு உலையால், ஆண்டுதோறும் பத்து பில்லியன் கிலோவாட் / மணிநேர மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். இதனால் கரியமில வாயு உமிழ்வை 8.16 மில்லியன் டன் அளவுக்கு குறைக்க முடியும்.

7. மெரியம்–வெப்ஸ்டரால் நடப்பாண்டின் (2020) சிறந்த சொல்லாக தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் எது?

அ. Lockdown

ஆ. Pandemic ☑

இ. Vaccine

ஈ. Immunity

❖ அமெரிக்காவைச் சார்ந்த மெரியம்–வெப்ஸ்டர் அதன் அகராதிகளுக்கு பெயர்பெற்றது. அண்மையில், 'Pandemic' என்ற சொல்லை அதன் நடப்பாண்டின் (2020) சிறந்த சொல்லாக அறிவித்துள்ளது. மார்ச்.11 அன்று உலக நலவாழ்வு அமைப்பு, COVID–19 பரவலை உலகளாவிய தொற்றுநோயாக அறிவித்ததை அடுத்து, 'Pandemic' என்ற சொல்குறித்த தேடல்கள் பெருமளவில் உயர்ந்தன. இச்சொல்லுக்கு இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளில் வேர்கள் உள்ளன.

8.நடப்பாண்டில் (2020) கேம்பிரிட்ஜ் அகராதியில் மிகவதிகமாக தேடப்பட்ட சொற்களின்படி '2020ஆம் ஆண்டின் சொல்' என்று அறிவிக்கப்பட்ட சொல் எது?

அ. Lockdown

ஆ. Quarantine ☑

இ. Vaccine

ஈ. Immunity

❖ நடப்பாண்டில் (2020) கேம்பிரிட்ஜ் அகராதியில் அதிகம் தேடப்பட்ட சொற்களில், 'Quarantine' என்ற சொல்லாகும் ஒன்றாகும் என்பதைக் காட்டிய தரவுகளின் அடிப்படையில், கேம்பிரிட்ஜ் அகராதியானது 'Quarantine' என்ற சொல்லை, '2020ஆம் ஆண்டின் சொல்' என்று அறிவித்துள்ளது.

9.கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான நான்காவது இந்தியா – இலங்கை – மாலத்தீவு முத்தரப்பு கூட்டத்தை நடத்திய நாடு எது?

அ. இந்தியா

ஆ. இலங்கை ☑

இ. மாலத்தீவுகள்

ஈ. ஜப்பான்

❖ இந்தியா, இலங்கை மற்றும் மாலத்தீவு இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான நான்காவது முத்தரப்பு கூட்டத்தை இலங்கை நடத்தியது. இது கொழும்பில் நடைபெற்றது. இந்தியாவை

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் பிரதிநிதித்துவப்படுத்தினார். முன்னதாக, இதுபோன்ற கூட்டங்கள் மாலத்தீவு (2011), இலங்கை (2013) மற்றும் இந்தியாவில் (2014) நடைபெற்றன.

10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'தொழில்நுட்ப மந்தநிலை – Technical Recession', தொடர்ச்சியாக எத்தனை காலாண்டுகளுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறுக்கத்தைக் குறிக்கிறது?

அ. இரண்டு ☑

ஆ. நான்கு

இ. ஆறு

ஈ. எட்டு

❖ இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2020–21 நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் 7.5% ஆக சுருங்கியுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறுக்கமானது தொடர்ச்சியாக இரண்டாம் காலாண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்தியா, 'தொழில்நுட்ப மந்தநிலை'யில் நுழைந்ததாக கூறப்படுகிறது. 2020–21 முதல் காலாண்டில் (ஏப்ரல் – ஜூன்) மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி 23.9% ஆக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, ஹயாபுசா 2 என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் விண்கலமாகும்?

அ. இஸ்ரேல்

ஆ. ஜப்பான் ☑

இ. ஐக்கியப் பேரரசு

ஈ. பிரான்ஸ்

❖ ஜப்பானின் 'ஹயாபுசா 2' என்ற விண்கலமானது புவியிலிருந்து சுமார் 300 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ள ரியுகு என்ற சிறுகோளிலிருந்து ஓராண்டுகால பயணத்திற்குப் பிறகு தற்போது புவியை நோக்கி நெருங்கிவருகிறது. ஜப்பானிய விண்வெளி ஆய்வு முகமையின்படி, இவ்விண்கலம் மண் மாதிரிகள் மற்றும் தரவுகளை பூமிக்கு கொண்டுவரும். அது சூரிய குடும்பத்தின் தோற்றம் மற்றும் பூமியில் உள்ள உயிர்களின் தோற்றம் குறித்த தடயங்களை வழங்கும். மண் மாதிரிகள் அடங்கிய பொதியை தெற்கு ஆஸ்திரேலியாவில் அந்நிறுவனம் தரையிறக்கும்.

2.தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாக, சுகாதார அமைச்சகத்திடமிருந்து உறுப்பு தானத்திற்காக சிறந்த மாநில விருதைப் பெற்ற மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளம்

இ. கர்நாடகா

ஈ. தெலுங்கானா

❖ ஒவ்வோர் ஆண்டும், நவ.27ஆம் தேதியை தேசிய உறுப்புதான நாளாக இந்திய அரசு அனுசரிக்கிறது. இந்த ஆண்டு, பதினோராவது உறுப்புதான நாளைக் குறிக்கிறது. உறுப்புதானத்திற்கான, 'சிறந்த மாநில விருதானது' தமிழ்நாட்டுக்கு, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு வழங்கியது. தமிழ்நாடு, இந்த விருதை தொடர்ந்து ஆறாவது ஆண்டாக பெறுவது குறிப்பிடத்தக்கது.

3. WHO'இன் ஓர் அண்மைய அறிக்கையின்படி, தென்கிழக்கு ஆசியாவில், குறைவான மலேரியா நோய்த் தாக்குதலைப் பதிவுசெய்த நாடு எது?

அ. இந்தியா ☑

ஆ. வங்கதேசம்

இ. பாகிஸ்தான்

ஈ. மியான்மர்

❖ WHO'இன் ஓர் அண்மைய அறிக்கையின்படி, தென்கிழக்காசிய பிராந்தியத்தில் குறைவான மலேரியா நோய்த்தாக்குதலைப் பதிவுசெய்த நாடு இந்தியா ஆகும். 'உலக மலேரியா அறிக்கை – 2020'இன்படி, இந்தியாவில், 2000ஆம் ஆண்டில் 20 மில்லியனாக இருந்த மலேரியா நோய்த்தாக்குதல் எண்ணிக்கை

2019ஆம் ஆண்டில் சுமார் 5.6 மில்லியனாகக் குறைந்துள்ளது. மலேரியாவால் இறப்பவர்களின் எண்ணி–க்கையும் இந்தியாவில் குறைந்துள்ளது. உலகளவில் கடந்த 2019ஆம் ஆண்டில் மலேரியாவால் 229 பேர் பாதிக்கப்பட்டனர்.

4.பெட்ரோடவா டேசியன் கோட்டையானது ஒரு பிரபலமான தொல்பொருள் நினைவுச்சின்னமாகும். அது எந்த நாட்டில் அமைந்துள்ளது?

அ. பிரான்ஸ்

ஆ. ருமேனியா ☑

இ. பல்கேரியா

ஈ. சிலி

❖ பெட்ரோடாவா டேசியன் கோட்டையானது ருமேனியாவின் பியட்ரா நீம்ட் நகரத்தில் அமைந்துள்ள மிகப் பழமையான வரலாற்று நினைவுச்சின்னமாகும். இந்தக்கோட்டை, பொஆமு 82 மற்றும் பொ ஆ 106'இல் பண்டைய ஐரோப்பாவில் டேசியன் மக்களால் கட்டப்பட்டது. அமெரிக்காவின் உட்டாவில் உள்ள ஒரு தொலைதூர, மக்கள் வசிக்காத பாலைவனத்தில் முதல் மர்மமான உலோக ஒற்றைக் கட்டுமானம் காணாமல்போன சில நாட்களுக்குப்பின், கோட்டையிலிருந்து சில மீ., தொலைவிலுள்ள ருமேனியாவில் இதேபோன்ற இரண்டாவது கட்டமைப்பு தென்பட்டது. மறைந்து மீண்டும் தோன்றிய அந்த ஒற்றைக் கட்டுமானம் பளபளப்பான ஒரு முக்கோணத் தூணாகும்.

5.ஆசிய வளர்ச்சி வங்கியானது (ADB) எந்த மாநிலத்தின் மின் விநியோகத்தை சீரமைப்பதற்காக $132.8 மில்லியன் டாலர் கடனுதவியை வழங்கவுள்ளது?

அ. மேற்கு வங்கம்

ஆ. அஸ்ஸாம்

இ. மேகாலயா ☑

ஈ. ஒடிசா

❖ மேகாலயா மாநிலத்தில் உள்ள வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்தின் தரத்தை மேம்படுத்தவும், அவற்றை நவீனமயமாக்கி வலுப்படுத்தவும் ஆசிய வளர்ச்சி வங்கியிடம் $132.8 மில்லியன் டாலர் கடன் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம், 'அனைவருக்கும் 24 மணி நேரமும் மின்சாரம்' என்ற மேகாலயா மாநில அரசின் முயற்சிக்கு ஆதரவளிப்பதுடன் மின்சார விநியோகத்தை சீர்படுத்துவதன் வாயிலாக வணிக ரீதியாக மாநிலத்திற்கு ஏற்படும் இழப்பையும் குறைக்க முடியும்.

6. 'குருபுராப்' என்பது கீழ்க்காணும் எந்த சீக்கிய குருவின் பிறந்தநாளாகும்?

அ. குரு நானக் ☑ ஆ. குரு கோபிந்த் சிங்

இ. குரு தேஜ் பகதூர் ஈ. குரு அர்ஜன்

❖ முதலாவது சீக்கிய குருவான குருநானக்கின் பிறந்தநாள், 'குருநானக் தேவ் குர்புராப்' எனக் கொண்டாடப்படுகிறது. இது பொதுவாக, 'குருபுராப்' என்று அழைக்கப்படுகிறது. அவ்வேளையில், 'பிரதமர் நரேந்திர மோடியும், சீக்கியர்களுடனான அவரது அரசாங்கத்தின் சிறப்பு உறவும்' என்ற தலைப்பிலான நூலும் வெளியிடப்பட்டது. அது, தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது. குருநானக் அவர்களின் செய்திகளுடன் ஆங்கிலம், ஹிந்தி மற்றும் பஞ்சாபி மொழிகளில் அது வெளியிடப்பட்டது.

7. 'துவாரே சர்க்கார்' என்ற பரப்புரைத் திட்டத்தை அறிவித்துள்ள மாநில அரசு எது?

அ. ஒடிசா

ஆ. மேற்கு வங்கம் ☑

இ. சத்தீஸ்கர்

ஈ. ஜார்க்கண்ட்

❖ மேற்கு வங்க மாநில அரசு சமீபத்தில் "துவாரே சர்க்கார்" அல்லது "உங்கள் வீட்டு வாசலில் அரசாங்கம்" என்ற பெயரில் ஒரு பெரிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தின்கீழ், கன்யாஸ்ரீ, காத்யா சதி, சிக்ஷாஸ்ரீ உள்ளிட்ட மாநிலத்தின் 11'க்கும் மேற்பட்ட திட்டங்களின் பயனை மக்கள் பெறமுடியும். மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக மாநிலத்தில், "துவாரே சர்க்கார்" முகாம்கள் அமைக்கப்படும் என மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

8.நடப்பாண்டில் (2020) வரும் பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

International Day of Persons with Disabilities 3 DECEMBER

அ. Empowering persons with disabilities

ஆ. Building Back Better: Toward a Disability-Inclusive, Accessible and Sustainable Post-COVID-19 World ☑

இ. Transformation towards sustainable and resilient society for all

ஈ. Ensuring inclusiveness and equality

❖ மக்கள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுக்கு மேன்மையும், உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்துக்குமாக ஐக்கிய நாடுகள் அவை ஆண்டுதோறும் டிச.3 அன்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாளை அனுசரிக்கிறது. 1992ஆம் ஆண்டு டிச.3 அன்று ஐநா இந்நாளை அறிவித்தது.

❖ நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருள், "Building Back Better: Toward a disability–inclusive, accessible and sustainable post–COVID–19 World" என்பதாகும்.

9.வளர்ந்துவரும் இளந்திறமையாளர்களை கௌரவிக்கும் BAFTA அமைப்பின் புதிய முன்னெடுப்புக்கு தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ. ஏ ஆர் இரகுமான் ☑ ஆ. இரஜினிகாந்த்

இ. கமல்ஹாசன் ஈ. ஜி வி பிரகாஷ்

- வளர்ந்துவரும் இளந்திறமையாளர்களை கௌரவிக்கும் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சிக் கலைகளுக்கான பிரிட்டிஷ் அகாடமியின் (BAFTA) புதிய முன்னெடுப்புக்கு இசையமைப்பாளர் ஏ ஆர் இரகுமான் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். 'Breakthrough' என்பது அந்த முன்னெடுப்பின் பெயராகும். 'நெட்பிளிக்ஸ்' ஆதரவுடன் இந்தப் புதிய முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

10. "*Cnemaspis avasabinae*" என்ற புதிய குள்ள மரப்பல்லி வகையானது எம்மாநில எல்லைக்குள் அமைந்துள்ள கிழக்குத்தொடர்ச்சிமலையில் கண்டுபிடிக்கப்பட்டது?

அ. தமிழ்நாடு

ஆ. ஆந்திர பிரதேசம் ☑

இ. ஒடிசா

ஈ. கர்நாடகா

- ஓர் ஆராய்ச்சியாளர்கள் குழுமமானது, "*Cnemaspis avasabinae*" என்ற புதிய குள்ள மரப்பல்லி வகையை கண்டுபிடித்துள்ளது. அது கிழக்குத்தொடர்ச்சிமலையில் இதுவரையிலும் கண்டறியப்பட்ட மிகச்சிறிய இந்திய மரப்பல்லி வகையாகும். "*Cnemaspis avasabinae*" என்பது மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கு வெளியே கண்டுபிடிக்கப்பட்ட 12 மரப்பல்லி இனங்களுள் ஒன்றாகவும் ஆந்திர பிரதேச மாநிலத்தின் வேலிகொண்டா மலைத்தொடரில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் மரப்பல்லி இனமும் ஆகும்.
- இப்புதிய இனத்திற்கு, "சபினின் நெல்லூர் குள்ள மரப்பல்லி" என்ற பொதுப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்த கட்டுரை, "A new species of South Asian Cnemaspis (Squamata: Gekkonidae) from the Eastern Ghats, India" என்ற தலைப்பில் ஜூடாக்சா இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1.பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் என்பது இரஷ்யாவின் மஷினோஸ்ட்ரோயினியா மற்றும் கீழ்க்காணும் எந்த இந்திய நிறுவனத்தால் அமைக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும்?

அ. ISRO

ஆ. DRDO ☑

இ. BHEL

ஈ. HAL

❖ 'பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ்' என்பது இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் இரஷ்யாவின் மஷினோஸ்ட்ரோயினியா ஆகியோரால் அமைக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும். அண்மையில், கப்பல்களைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை, இந்திய கடற்படையால் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்த பிரம்மோஸ் ஏவுகணை, சவாலான போர்க்களங்களில் இலக்குகளை துல்லியமாக தாக்கும் திறன்பெற்றது. பல்வேறு சிறப்பம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த பிரம்மோஸ் ஏவுகணை, இந்தியாவின் முப்படைகளிலும் இணைக்கப்பட்டுள்ளது.

2.ஜப்பானின் JCB இன்டர்நேசனலுடன் இணைந்து தொடுதலற்ற பற்றட்டையை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய வங்கி எது?

அ. பஞ்சாப் தேசிய வங்கி

ஆ. பாரத வங்கி ☑

இ. HDFC வங்கி

ஈ. ஆக்ஸிஸ் வங்கி

❖ புதிய 'SBI RuPay JCB பிளாட்டினம் தொடுதலற்ற பற்றட்டையை' அறிமுகப்படுத்துவதற்காக பாரத வங்கி நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மற்றும் ஜப்பானின் JCB இன்டர்நேசனல் கோ ஆகியவற்றுடன் கூட்டிணைந்துள்ளது. இந்த அட்டை, இரட்டை இடைமுக அம்சத்தைக் கொண்டுள்ளது. இதன்கீழ், வாடிக்கையாளர்கள், உள்நாட்டு சந்தை மற்றும் வெளிநாடுகளில் தொடுதல் மற்றும் தொடுதல் அற்ற பரிவர்த்தனைகளுக்கு இதைப்பயன்படுத்தலாம். இது RuPay வலையமைப்பில் தொடங்கப்பட்டது.

3.எந்த ஆண்டில், சீனா தனது இலட்சியத் திட்டமான, 'ஒரு பட்டை மற்றும் ஒரு பாதை' முன்னெடுப்பைத் தொடங்கியது?

அ. 2000

ஆ. 2005

இ. 2013 ☑

ஈ. 2017

❖ தென்கிழக்காசியா, மத்திய ஆசியா, வளைகுடா பகுதி, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவை நிலம் மற்றும் கடல் வழித்தடங்களுடன் இணைப்பதற்காக, சீனா, 2013ஆம் ஆண்டில் தனது இலட்சியத் திட்டமான 'ஒரு

பட்டை மற்றும் ஒரு பாதை' முன்னெடுப்பைத் தொடங்கியது. SCO அரசாங்கத் தலைவர்கள் குழுமத்தின் 19ஆம் கூட்டத்தின்போது, இந்தியாவைத்தவிர SCO'இன் பிற அனைத்து உறுப்புநாடுகளும் சீனாவின் OBOR திட்டத்திற்கு தங்கள் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தின. OBOR'இன் ஒருபகுதியாக இருக்கும் சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தை, இந்தியா, கடுமையாக விமர்சித்தது.

4.நடப்பாண்டு (2020) இலங்கை பொருளாதார உச்சிமாநாட்டில், முக்கிய குறிப்புரையை ஆற்றிய இந்திய அமைச்சர் யார்?

அ. பியூஷ் கோயல்

ஆ. நிர்மலா சீதாராமன் ☑

இ. நிதின் கட்கரி

ஈ. ஜெய் சங்கர்

❖ நடப்பாண்டில் (2020) மெய்நிகராக நடைபெற்ற இருபதாவது இலங்கை பொருளாதார உச்சிமாநாட்டில், மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன் சிறப்புரையாற்றினார். சிலோன் வர்த்தக சபையால் ஆண்டுதோறும் இந்த உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்படுகிறது. "Roadmap for Take–off: Driving a People – Centric Economic Revival" என்பது நடப்பாண்டு உச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்.

5.நாட்டின் முதல் 100 ஆக்டேன் பெட்ரோலை அறிமுகப்படுத்தியுள்ள இந்திய பொதுத்துறை நிறுவனம் எது?

அ. HPCL

ஆ. IOCL ☑

இ. GAIL

ஈ. ONGC

❖ இந்திய எண்ணெய் நிறுவனமானது (IOCL) அண்மையில் நாட்டின் முதல் '100 ஆக்டேன்' பெட்ரோலை அறிமுகப்படுத்தியது. இந்த பெட்ரோலை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிமுகப்படுத்தினார். 'XP 100 பிரீமியம் பெட்ரோல்' என்றும் அழைக்கப்படும் '100–ஆக்டேன்' பெட்ரோலானது தொடக்கத்தில் 10 நகரங்களில் IOC'இன் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படும். உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள IOC'இன் மதுரா சுத்திகரிப்பு நிலையத்தில் இந்த எரிபொருள் தயாரிக்கப்படுகிறது.

❖ ஹிந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனமானது (HPCL) முன்னதாக 'ஆக்டேன் 99'ஐ அறிமுகப்படுத்தியது. எரிபொருளின் ஆக்டேன் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், அதன் செயல்திறன் அதிகமாக இருக்கும்.

6.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'பால்ஸ்னேகி (குழந்தைகட்கு உகந்த / தோழமையான) காவல் நிலையம்' திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ. சென்னை

ஆ. புனே ☑

இ. திருவனந்தபுரம்

ஈ. லக்னோ

❖ புனே முகாமில் உள்ள லஷ்கர் காவல் நிலைய வளாகத்தில், புனே நகர காவல்துறை, 'பால்ஸ்னேகி' காவல் நிலையத்தை திறந்துவைத்துள்ளது. அங்கு புகாரளிக்க வரும் குழந்தைகளுக்கு என அந்தக் காவல் நிலையத்தில் பிரத்தியேக அறை ஒன்று உள்ளது. குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஓர் அமைப்பை உருவாக்குவதையும் அது நோக்கமாகக் கொண்டுள்ளது. முன்னதாக, கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள மச்சிலிபட்டிணம் வளாகத்தில் இதுபோன்ற காவல் நிலையம் அமைக்கப்பட்டது.

7. 'Defence Geo Informatics Research Establishment' என்பது கீழ்க்காணும் எந்த அமைப்பின் ஒரு புதிய ஆய்வகமாகும்?

அ. ISRO

ஆ. DRDO ☑

இ. BHEL

ஈ. HAL

❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DROD) பாதுகாப்பு புவித்தகவலியல் ஆராய்ச்சி நிறுவனம் என்றவொரு புதிய ஆய்வகத்தை உருவாக்கியுள்ளது. மணாலியித் தலைமையிடமாகக் கொண்ட பனி மற்றும் பனிச்சரிவு ஆய்வுகள் நிறுவனம் (SASE) மற்றும் தில்லியைச் சார்ந்த இராணுவ நிலப்பரப்பு ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய இரு ஆய்வகங்களை இணைத்து இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப்புதிய ஆய்வகமானது சீனா மற்றும் பாகிஸ்தானுடனான எல்லைகளில் உள்ள நிலப்பரப்பு குறித்த ஆராய்ச்சியில் தனது முழு கவனத்தைச் செலுத்தும்.

8.ஆதி மகோத்சவத்தின் முதல் மெய்நிகர் பதிப்பானது கீழ்க்காணும் எம்மாநிலத்தில் கொண்டாடப்பட்டது?

அ. உத்தர பிரதேசம்

ஆ. மத்திய பிரதேசம் ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. அஸ்ஸாம்



❖ மத்திய பிரதேச மாநிலத்தின் முதல் மெய்நிகரான ஆதி மகோத்சவ விழா, market.tribesindia.com என்ற இணையதளத்தில் டிச.1–10ஆம் தேதி வரை நடக்கிறது. இதை, மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா காணொலிகாட்சிமூலம் தொடங்கிவைத்தார். இதில் 3500'க்கும் மேற்பட்ட பழங்குடியின கலைஞர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிக்கு வைத்துள்ளனர்.

❖ பழங்குடி நலத்துறை அமைச்சகமும், இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பின் (TRIFED) கூட்டு முயற்சியில் இந்த விழா நடத்தப்படுகிறது. "மத்திய பிரதேச மாநிலத்தின் பழங்குடி கைவினை மற்றும் கலாச்சாரம் – Tribal Craft and Culture of Madhya Pradesh" என்பது இந்த விழாவின் கருப்பொருளாகும்.

9.இலையுதிர்வு நோயால் அண்மையில் எந்த நாட்டின் இரப்பர் தோட்டங்கள் பாதிக்கப்பட்டன?

அ. இந்தியா

ஆ. இந்தோனேஷியா

இ. பூட்டான்

ஈ. தாய்லாந்து ☑

❖ அண்மையில், தாய்லாந்தின் இரப்பர் தோட்டங்கள் இலையுதிர்வு நோயால் பாதிக்கப்பட்டன. நவம்பர் மாதத்தில் அதன் மொத்த பாதிப்பு 90,000 ஹெக்டேராக இருந்தது. இதன் காரணாமக 1.30 இலட்சம் டன் இரப்பர் உற்பத்தி இழப்பு ஏற்பட்டது. இந்நோய், இந்தியாவுக்கு பரவக்கூடிய சாத்தியம் இருப்பதாக ரப்பர் வாரிய அதிகாரிகள் எச்சரிக்கை தெரிவித்துள்ளனர்.

10.வேதிப்போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐநா அவையின் நினைவு நாள் (The United Nations' Day of Remembrance for all Victims of Chemical Warfare) அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. நவம்பர் 30 ☑

ஆ. டிசம்பர் 01

இ. டிசம்பர் 02

ஈ. டிசம்பர் 03

❖ வேதிப்போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும், இரசாயன ஆயுதங்களை தடை செய்வதற்கான அமைப்பின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும் ரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தலை நீக்குதல் மற்றும் உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் பலதரப்புவாதத்தை ஊக்குவித்தல் ஆகிவற்றுக்குமாக, வேதிப்போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஐநா அவையின் நினைவு நாளானது ஆண்டுதோறும் நவ.30 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், முதன்முதலில் 30 நவம்பர் 2016 அன்று அனுசரிக்கப்பட்டது. 'இரசாயன ஆயுதங்கள் தீர்மானம்' என்பது கடந்த 1993ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1997 ஏப்ரல்.29 அன்று நடைமுறைக்கு வந்தது.

நடப்பு நிகழ்வுகள்

1.போதைப்பொருள் தடுப்புப்பணிக்குழுவின் முதலாவது கூட்டத்தை இந்தியா கீழ்க்காணும் எந்நாட்டோடு இணைந்து நடத்தியது?

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஆ. ஜப்பான்

இ. பிரேசில்

ஈ. இஸ்ரேல்

❖ இந்திய– அமெரிக்க போதைப்பொருள் தடுப்புப்பணிக்குழுவின் முதலாவது கூட்டத்தில் இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அதிகாரிகள் காணொலி வாயிலாகக் கலந்துகொண்டனர். மத்திய உள்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படும் போதைப்பொருள் தடுப்பு வாரியத்தின் துணை இயக்குநர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார். போதைப்பொருட்களை சட்டத்துக்குப்புறம்பாக தயாரித்தல், உற்பத்தி செய்தல், விநியோகிப்பது ஆகியவற்றுக்கு எதிரான ஒத்துழைப்பை இருநாடுகளும் வலுப்படுத்துவதில் தங்களது உறுதித்தன்மையை இருநாட்டு பிரதிநிதிகளும் வெளிப்படுத்தினர்.

2. கீழ்க்காணும் எந்த மாநிலத்தின் நிதி சீர்திருத்தத்திற்காக, $50 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவி வழங்கவுள்ளது?

அ. மகாராஷ்டிரா

ஆ. மேற்கு வங்கம் ☑

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. மத்திய பிரதேசம்

❖ மேற்கு வங்க மாநிலத்தில் நிதி மேலாண்மை நடவடிக்கைகளை மேம்படுத்தவும், மக்களுக்கு சிறந்த சேவைகளை அளிக்கவும், டிஜிட்டல் தளங்களை மேம்படுத்த $50 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் ஒப்பந்தத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியும், நடுவணரசும் கையெழுத்திட்டன. இக்கடனுதவி மாநிலத்தின் செயல்பாட்டுத்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. போக்குவரத்துக் கழகங்கள் & நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான இணைய அடிப்படையிலான குறைதீர்க்கும் முறையுடன் இணைந்து நிதிக்கொள்கை மற்றும் பொது நிதியத்துக்கான மையம் ஒன்றும் நிறுவப்படவுள்ளது.

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, '737 மேக்ஸ்' என்பது கீழ்க்காணும் எந்தப் பிரபல நிறுவனத்தின் வானூர்தியாகும்?

அ. ஏர்பஸ்

ஆ. போயிங் ☑

இ. குவாண்டாஸ்

ஈ. எமிரேட்ஸ்

- '737 மேக்ஸ்' என்பது அமெரிக்காவைச் சார்ந்த வான்வெளிப்போக்குவரத்து நிறுவனமான போயிங்கின் அதிகம் விற்பனையாகும் வானூர்தியாகும். ஐந்து மாத காலத்திற்குள் இருவேறு வான்விபத்துகளை இவ்வகை வானூர்திகள் ஏற்படுத்தியதில் மொத்தம் 346 பேர் மரணித்ததை அடுத்து கடந்த 2019 மார்ச் மாதத்தில் இவ்வகை விமானங்கள் அனைத்தும் தரையிறக்கப்பட்டன.

- '737 மேக்ஸ்' வானூர்தியின் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட பதிப்பானது அண்மையில் ஊடகங்கள் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்டது. அது டெக்சாஸிலிருந்து அமெரிக்காவின் ஒக்லஹோமாவுக்கு 45 நிமிட வான்வெளிப் பயணத்தை மேற்கொண்டது. இவ்வகை வானூர்தியின் முதல் வணிக ரீதியிலான பயணிகள் சேவை டிசம்பர் மாத இறுதியில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

4. 'அடிமை முறை உழைப்பில் பெறப்பட்ட பொருள்' எனக்குறிப்பிட்டு சீனாவிலிருந்து பருத்தி இறக்குமதி செய்வதை தடைசெய்த நாடு எது?

அ. இந்தியா

ஆ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

இ. இரஷ்யா

ஈ. ஐக்கியப் பேரரசு

- சீனத்தின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒருவரான ஜின்ஜியாங் உற்பத்தி மற்றும் கட்டுமானப் படையிலிருந்து பருத்தி மற்றும் பருத்திசார்ந்த தயாரிப்புகளை இறக்குமதிசெய்ய தடைவிதித்து ஐக்கிய அமெரிக்க நாடுகள் உத்தரவு பிறப்பித்துள்ளது. சின்ஜியாங் பிராந்தியத்தின் மீதான பொருளாதார அழுத்தத்தை அதிகரிப்பதற்கான ஆணையை அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. உய்குர் இசுலாமியர்களை கட்டாயப்படுத்தி, 'அடிமை முறை உழைப்பின் மூலமாக பெறப்பட்ட பொருள்' என்பதை தடைக்கான காரணமாக அமெரிக்கா மேற்கோள் காட்டியுள்ளது.

5. இந்தியா–சுரிநாம் கூட்டு ஆணையக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. சுரிநாம் அமைந்துள்ள இடம் எது?

அ. ஆப்பிரிக்கா

ஆ. வட அமெரிக்கா

இ. ஐரோப்பா

ஈ. தென்னமெரிக்கா ☑

- சுரிநாம் (அதிகாரப்பூர்வமாக சுரிநாம் குடியரசு) என்பது தென்னமெரிக்காவின் வடகிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள ஒரு சிறிய நாடாகும். இது முன்பு 'டச்சு கயானா' என்று அழைக்கப்பட்டது. 7ஆம் இந்தியா–சுரிநாம் கூட்டு ஆணையக்கூட்டமானது (JCM) அண்மையில் மெய்நிகராக நடந்தது. இந்த ஆணையக் கூட்டத்திற்கு வெளியுறவு இணையமைச்சர் வி முரளீதரன் & சுரிநாமின் வெளியுறவு இணையமைச்சர் ஆகியோர் இணைந்து தலைமைதாங்கினர்.

6.அனைத்துலக உள்நாட்டு வான்போக்குவரத்து நாள் (International Civil Aviation Day) அனுசரிக்கப்படும் தேதி எது?

அ. டிசம்பர் 07 ☑

ஆ. டிசம்பர் 08

இ. டிசம்பர் 09

ஈ. டிசம்பர் 10

- 1996ஆம் ஆண்டில், ஐநா அவையின் பொது அவை, டிச.7'ஐ அனைத்துலக சிவில் வான்போக்குவரத்து நாள் என அறிவித்தது. அனைத்துலக உள்நாட்டு வான் போக்குவரத்து மாநாட்டில் கையெழுத்திட்டதன் ஐம்பதாமாண்டு நிறைவுநாளான 1994 டிச.7ஆம் தேதி முதல் பன்னாட்டு உள்நாட்டு வான்போக்குவரத்து அமைப்பால் இந்த நாள் கொண்டாடப்பட்டுவருகிறது. உலகின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வானூர்தியின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதே இந்நாளின் நோக்கமாகும்.

7.ஆயுதப்படைகளின் கொடி நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?

அ. டிசம்பர் 07 ☑

ஆ. டிசம்பர் 08

இ. டிசம்பர் 09

ஈ. டிசம்பர் 10

- ஆயுதப்படைகளின், 'கொடி நாள்' என்பது இந்தியாவின் முப்படை வீரர்களின் அரும்பணிகளையும், தியாகத்தையும் போற்றும் ஒரு நாளாகும். ஆண்டுதோறும் டிசம்பர்.7 அன்று படைவீரர் கொடி நாளாக இந்திய அரசு கடைப்பிடித்துவருகிறது. இந்தக்கொடிநாள், 1949 டிசம்பர்.7 முதல் இந்தியா முழுமைக்கும் கொண்டாடப்பட்டுவருகிறது.

- தியாக உணர்வுடன் பணியில் ஈடுபடும் முப்படை வீரர்களின் குடும்பநலனையும், முன்னாள் படை வீரர்களின் நலனையும் காப்பதற்கான சமுதாயக்கடமையை நிறைவேற்றும் வகையில், தேசியக்கொடி விற்பனைமூலம் திரட்டப்படும் நிதியானது படைவீரர்களின் குடும்பத்தினரின் நலவாழ்வுக்காகவும், உடலுறுப்புகளை இழந்த படைவீரர்களின் மறுவாழ்வுப்பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது.

8. 'இமேஜின் கோப்பை–2021'இன் இந்தியா பதிப்பில், மைக்ரோசாப்டின் அறிவுசார் பங்காளர் எது?

அ. தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் ☑

ஆ. NITI ஆயோக்

இ. மைகவ்

ஈ. தூர்தர்ஷன்

- மைக்ரோசாப்ட் இந்தியாவும் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகமும், 'மைக்ரோசாப்ட் இமேஜின் கோப்பை 2021'இன் இந்தியா பதிப்பிற்காக கூட்டிணைந்துள்ளன. 'இமேஜின் கோப்பை' என்பது மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப ஆர்வலர்களுக்காக மைக்ரோசாப்ட் நடத்தும் ஒரு புத்தாக்க சவால் நிகழ்வாகும்.

- உலகின் நீடித்தல் சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதற்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் பிற தொழில்நுட்ப –ங்களைப் பயன்படுத்த மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

9. 2020 டிசம்பரில் நடந்த ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கைக் குழு கூட்டத்திற்குப் பிறகு புதிய ரெப்போ விகிதம் என்ன?

அ. 4.2 சதவீதம்

ஆ. 4.0 சதவீதம் ☑

இ. 3.8 சதவீதம்

ஈ. 3.5 சதவீதம்

- 2020 டிச.4 அன்று நடைபெற்ற இந்திய ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கைக் குழு, வட்டி விகிதங்களை மாற்றாமல் வைத்திருக்க முடிவுசெய்தது. ரெப்போ வீதத்தை 4% எனவும் தலைகீழ் ரெப்போ வீதத்தை 3.35% எனவும் அக்குழு முடிவு செய்துள்ளது. நிதியாண்டு 21'இல் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி –7.5% ஆக இருக்கும் எனவும் ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. பணவீக்க விகிதம் அதிகமாக இருக்கும் என்றும் அக்குழு எதிர்பார்க்கிறது.

10.CLMV நாடுகள் என்பவை கீழ்க்காணும் எந்தப் பிராந்திய அமைப்பிலும் உள்ளன?

அ. ASEAN ☑

ஆ. காமன்வெல்த்

இ. G20

ஈ. G7

- CLMV நாடுகள் என்பவை கம்போடியா (C), லாவோஸ் (L), மியான்மர் (M) மற்றும் வியட்நாம் (V) ஆகிய நாடுகளாகும். அவை, தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் (ASEAN) உறுப்பினர்களாகவும் உள்ளன. ஆறாவது இந்தியா–CLMV வர்த்தக மாநாட்டின் தொடக்க அமர்வின்போது, இந்தியா, CLMV நாடுகளை பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி மற்றும் இந்தியாவின் நெகிழ்திறன் விநியோக சங்கிலி முயற்சியில் இணைவதற்கு அழைப்பு விடுத்தது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள, 'தீ' என்னும் திறன்பேசி செயலியை மக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க. பழனிசாமி தொடக்கிவைத்தார். தமிழ்நாடு தீயணைப்பு & மீட்புப்பணிகள் துறையின் சேவைகளை பொதுமக்கள் எளிதில் பெறவும், தீ, விபத்து, வெள்ளம், ஆழ்துளைக்கிணறு விபத்து, வனவுயிரி மீட்பு, வேதி மற்றும் நச்சு வளிக்கசிவு உள்ளிட்ட அவசர உதவிகளுக்கு இத்துறையை மக்கள் எளிதில் அணுகிடவும், நவீன தொழில்நுட்ப உதவியுடன் நாட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாடு தீயணைப்பு & மீட்புப்பணிகள் துறையால், 'தீ' எனும் திறன்பேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது.